17th March 1964]

புலவர் கா. கோவிந்தன் : மாணவர்கள் தமிழைப் பயிற்சி மொழியாக எடுத்து படித்து விட்டால் பிறகு தங்கள் வாழ்க்கைக்கு எந்த விதமான உறுதிப்பாடும் இல்லே என்ற காரணத்தினுல் இதை எடுத்துக்கொள்ள தயங்குகிருர்கள் என்பதை அரசாங்கம் உணருகிறதா? அப்படிப்பட்ட மாணவர்களுக்கு எதிர்கால வாழ்வில் நல்ல நிலே உண்டு என்றளவிற்கு இந்த அரசாங்கம் உறுதி அளிக்குமா? 9-00 a.m.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு நான் கருதவில்லே. மாணவர்களுக்கு உண்மையிலேயே தமிழில் அதிக ஊக்கமும் நம்பிக்கையும் வேண்டுமென்றுதான் நான் விரும்புகிறேன். வற்புறுத்துகிறேன். அவர்கள் உத்தியோகத்தையே எதிர் பார்க்கக் கூடாது. தமிழ்ப் படிப்பது ஒன்று. வேறு பாடங்களே, சரித்திர பாடங்கள், விஞ்ஞான பாடங்கள், பொருளாதாரப் பாடங்கள் அவற்றை தெரிந்து கொள்வது ஒன்று. அவற்றை நன்ருகத் தெரிந்து கொள்ள வேண்டுமென்ருல் அதற்கு வேண்டிய வசதியை தமிழ் மீடியம் மூலம் பெற முடியுமா என்பது மாணவர்களுக்கு சந்தேகம் ஏற்படுகிற விஷயம். அதை நாம் மறுப்பதிற்கில்லே.

Three Language Policy

* 293. *Q.*—SRI S. NANJUNDA ROW : Will the Hon. the Chief Minister be pleased to state the number of High Schools in Madras State in which arrangements have been made to teach Telugu, Malayalam and Kannada as per the Three Language Policy of Government?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : The number of schools in which arrangements have been made to teach **Telugu**, Malayalam and Kannada in this State are—

Telugu—96

Malayalam—9

Kannada—3

புலவர் கா. கோவிந்தன் : இந்த மொழிகளுக்கு இடம் அளிக்கிற எத்தனே பள்ளிகளில் அந்த மொழிகளில் கற்றுக்கொடுக்க ஆசிரியர்கள் இருக்கிருர்கள்? எத்தனே மாணவர்கள் படிக்கிருர்கள்?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : ஆசிரியர்கள் தான் கற்றுக்கொடுக்கிருர்கள். ஆசிரியர்களே வைத்துத்தான் நடத்துகிருேம். தெலுங்குப் பள்ளி என்று வைத்து தமிழில் சொல்லிக் கொடுக்கவில்லே. தெலுங்கில் தான் சொல்லிக் கொடுக்கிருர்கள். மலேயாளப் பள்ளிகளில் சொல்லிக் கொடுக்கிற ஆசிரியர்கள் மலேயாளத்தில் தான் சொல்லிக்கொடுக்கிருர்கள். கன்னடப் பள்ளியில் கன்னடத்தில்தான் சொல்லிக்கொடுக்கிருர்கள். எத்தனே மாணவர்கள் படிக்கிருர்கள் என்ற விவரம் என்னிடம் இல்லே.

திரு. து. ப. அழகமுத்து : தெலுங்கு, கன்னடம், மலேயாளம் போன்ற மொழிகளில் படிக்கிற மாணவர்கள் விரும்பிஞலும்கூட ஆசிரியர்கள் இல்லே என்று அந்த மொழிகள் போதிக்கப்படாமல் அதற்குப் பதில் இந்தி சொல்லிக் கொடுப்பதற்கு முயற்சிகள் நடைபெறுவது உண்மையா?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : அவ்வாறு ஒன்றுமில்லே. மாணவர்களே பெரும்பாலும், மும்மொழிக் கொள்கைப்படி ஒரு தமிழ் மாணவன் தெலுங்கு படிப்பதை விட இந்தி படிப்பது நல்லது என்று நினேக்கிருன். தெலுங்கை தாய்மொழியாகக் கொண்டவர்கள் மலேயாளம் படிப்பதைவிட இந்தி படிப்பது நல்லது என்று நினேக்கிருர்கள். தமிழை தாய் மொழியாகக் கொண்டவர்கள் வேறு ஒரு மொழி படிக்கவேண்டுமாஞல் தெலுங்கு, மலேயாளம், கன்னடம் படிப்பதைவிட இந்தி படிப்பது தனக்கும் நல்லது, தன் எதிர்காலத்திற்கும் நல்லது என்று நினேக்கிருர்கள்.

[17th March 1964

திரு. இரா. நெடுஞ்செழியன் : குறிப்பிட்ட ஒரு மொழியைப் படிக்க வேண்டுமென்று விரும்பி மாணவர்கள் முன் வரும்போது ஆசிரியர்கள் இல்லாத நிலையில் குறைந்த அளவு எவ்வளவு மாணவர்கள் கேட்டால் ஒரு ஆசிரியரை நியமிக்க திட்டம் இருக்கிறது.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : விவரம் சரியாக இல்லை. சுமார் 15 மாணவர்கள் இருக்கவேண்டும். குறிப்பிட்டதொரு மொழியைப் படிக்க வேண்டுமென்று விரும்பினால் ஆசிரியர்கள் அமைக்கதான் வேண்டு மென்பதை ஒப்புக்கொள்கிறேன். அப்படி அமைக்கப்பட்டு வருகிறது. எங் கேயாவது அப்படியில்லை என்றிருந்தால் அதை அரசாங்கத்தின் கவனத் திற்குக் கொண்டு வந்தால், உதாரணமாக எங்களுக்கு தெலுங்கு வேண் டும், ஆனால் தெலுங்கு ஆசிரியர்கள் இல்லை என்று சொன்னால், உடனே கல்வி இலாகாவிற்கு அனுப்பி அதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய சொல்லி கவனம் செலுத்தி வருகிறேன்.

புலவர் கா. கோவிந்தன் : தமிழகத்தில் 2,000 உயர்நிலைப்பள்ளிகள் இருக்கின்றன. ஆனால் 100 பள்ளிகளுக்கும் குறைவாகவே இந்த மூன்று மொழிகளுக்கு இடம் அளித்திருக்கிறார்கள். அந்தப் பள்ளிகளில் எத்தனை ஆசிரியர்கள், எத்தனை பிள்ளைகள் இருக்கிறார்கள் என்ற கணக்கை சொல்லமுடியுமா ?

கனம் சபாநாயகர் : தனிக்கேள்வி போட வேண்டும்.

புலவர் கா. கோவிந்தன் : ஆசிரியர்கள் இல்லை என்ற காரணத்தினால் ஆசிரியர்களின் கணக்கை கொடுக்கமுடியவில்லை என்பது உண்மையா?

கனம் திரு எம். பக்தவத்சலம் : கனம் அங்கத்தினர் சொல்வது முற்றிலும் தவறு. அத்தனையிலும் ஆசிரியர்கள் இருக்கிறார்கள். ஏதாவது பள்ளியில் ஆசிரியர் இல்லை என்றால் அதை என் கவனத்திற்கு கொண்டு வந்தால் மேலும் கவனம் செலுத்தலாம்.

அரசாங்க விருந்தினர் இல்லம்

***294 கேள்வி—திரு. முனு ஆதி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை அரசாங்க எஸ்டேட்டிலுள்ள விருந்தினர் விடுதியில் (State Guest House) 1962-63 ஆண்டில் தங்கிச் சென்றவர்கள் எத்தனை பேர் ?

(இ) இவர்களில் மத்திய அமைச்சர்கள், மற்றைய மாநில அமைச் சர்கள் எத்தனை பேர்?

(உ) 1962–63-ல் அவ் விடுதியில் ஆன செலவுத் தொகை எவ் வளவு?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (*a*) 378.

(*b*) 276 (Union Ministers 127 and Ministers of other States 149).

(*c*) Rs. 62,141·39 nP.

***295 கேள்வி—திரு. முனு. ஆதி :** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) சென்னை அரசாங்க எஸ்டேட்டில் உள்ள விருந்தினர் விடுதியில் (State Guest House) பராமரிப்பிற்காக அரசாங்கம் செலவிடும் தொகை எவ்வளவு?

(இ) இச் செலவை ஈடு செய்யும் வகையில் இவ் விருந்தினர் விடுதி யில் தங்குபவர்களுக்கு மத்திய அரசாங்க மானியம் கிடைக்கிறதா?

(உ) இவ் விடுதியில் யார் யார் தங்கலாம் என்று திட்டம் செய்யப் பட்டுள்ளது?